Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.105/2022, Cr.No.86/2022, Tirupathur Taluk PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| பெயர் | பாஸ்கரன் |
| வயது | 39 |
| தந்தை/கணவர் பெயர் | ரவிந்திரன் |
| தொழில் | உதவி மருத்துவர் |
| கிராமம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 22nd day of January 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>** <u>(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>

நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது, கடந்த 07.03.2022 அன்று இரவு 10.30 மணியளவில் ஜெயராமன் என்பவரை அவரது சகோதரர் ராமச்சந்திரன் சிகிச்சைக்காக அழைத்து வந்தபோது அவரை விசாரித்ததில் அவரின் வீட்டின் அருகில் அவரை மூன்று நபர்கள் கையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது,

1. வலது கால் முட்டியில் இரத்தக்கட்டு இருந்தது.
2. வலது இடுப்பு மூட்டில் இரத்தக்கட்டு இருந்தது.
3. வலது மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. **அவருக்கு வழங்கிய விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அவரை பரிசோதித்ததில் இருந்து அவருக்கு ஏற்பட்ட 1 மற்றும் 2–வது காயங்கள் சொற்பகாயம் என்றும் 3–வது காயம் கொடுங்காயம் என்றும் காயச்சான்று வழங்கினேன். **அந்த காயச்சான்று**

**அ.சா.ஆ.7–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.01.22 19:13:51 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.